
மாலை முரசு

பக்கங்கள் 21 + 05

## கட்சியின் தவிசாளராக பாக்கீர் மாக்கார் எம்.பி?



ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை தான் இராஜினாமா செய்வதாக அக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 04▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை 11.08.2024 | அதிர்வு 10

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வெள்ளி தொடக்கம் சூறாவளிப் பிரசாரம்!

## வேட்பு மனு ஏற்பு வியாழன் முடிந்ததும்

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரதான பரப்புரை போரை எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் முழு வீச்சுடன் முன்னெடுப்பதற்கு பிரதான கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர், அன்றைய தினம் பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர். 04▶

## ஜனாதிபதி செயலகக் கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பு பங்குபற்றாது

ஜனாதிபதி செயலகத்தில் நாளை அழைக்கப்பட்ட சந்திப்பில், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் 14 உறுப்பினர்களும் கலந்து கொள்ள மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஜனாதிபதியின் செயலகத்திலிருந்து தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் பொதுச்சபை உறுப்பினர்கள் ஐவருக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. இந்த அழைப்பில் திங்கட்கிழமை 04▶

## தமிழரசுத் தேசிய மாநாட்டுக்கு முன் மூலக் கிளைகளில் இருந்து கூட்டம்

தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்குக்குத் தீர்வு காணப்பட்ட பின்னர் கட்சியின் மூலக் கிளைகளில் இருந்து அனைத்துக் கிளைகளுக்குமான கூட்டங்களைப் புதிதாக நடத்தி, அதன் பின்னர் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவது என இன்று வவுனியாவில் நடைபெற்று வரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் மதியத்துக்கு முந்தைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

இந்தக் கூட்டம் இன்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள கட்சியின் தாயகம் அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்த கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலிலே 04▶



# சஜித்தின் அணி வெத்து வேட்டு!

## அநுரகுமார அறிவிப்பு

"ஐக்கிய மக்கள் கூட்டணியானது தேசிய மக்கள் சக்திக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது." என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகு மார திஸாநாயக்க தெரிவித்தார்.

"இந்நாட்டை இதுவரையில் நாசமாக்கிய குழுக்கள் புதிய பெயர்களில் கூட்டணிகளைஅமைத்துவருகின்றன. அவ்வாறு அமையும் கூட்டணிகள் தேசிய மக்கள் சக்திக்கு சவால் கிடையாது.

"ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பொன்சேகா வெளியில் இருக்கின்றார், மொட்டு கட்சியின் தவிசாளர் பீரிஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருக்கின்றார், இதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன?

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாறினாலும் மக்கள் எம்முடன் இருக்கின்றனர். மக்களே தீர்மானிக்கும் சக்தி. நாமல் ராஜபக்ஷவும் எமக்கு சவால் அல்லர்." – எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.





# இரத்தினபுரி எந்தான மடலகம தமிழ் ம.வியின் அதிபர் காரியாலயம் சனி இரவு தீ மூட்டி எரிப்பு

## பாடாசாலை ஆவணங்கள் நாசமாகின

(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)

இரத்தினபுரி மாவட்டம், எந்தான பொலிஸ் பகுதியிலுள்ள மடலகம தமிழ் வித்தியாலத்தின் அதிபர் காரியாலயத்திற்கு இனந்தெரியாத சிலரால் நேற்று சனிக்கிழமை மாலை 7 மணியளவில் தீ வைத்தனர் எனக் கூறப்படுகின்றது. இதனால் அங்கிருந்த மிக முக்கியமான பதிவுகள் மற்றும் மாணவர்களின் பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் அனைத்தும் முற்றாக எரிந்து நாசமாகின எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சனிக்கிழமை மாலை வேளையில் பாடசாலை கட்டடத்தில் இருந்து திடிரென பெரும் புகை மண்டலம் வெளிவரவே பிரதேச மக்கள் சம்பவ இடத்திற்கு ஓடிச் சென்று நிலமையைக் கவனத்தில் கொண்டு தீயை அணைத்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

பிரதேச வாசிகளின் அதீத முயற்சி காரணமாகவே இத்தீ பரவல் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இல்லையேல் பாடசாலை கட்டடமே முற்றாக சேதமடைந்த இருக்கும் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்

மூடப்பட்டிருந்த இப்பாடசாலையின் கதவை உடைத்து கொண்டு உள்ளே சென்ற இனந்தெரியாத நாசகாரர்கள் அலுமாரியிலுள்ள அனைத்து ஆவணங்களையும் வெளியே எடுத்து கீழே போட்டு தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.





இது குறித்து தகவலறிந்த எந்தான பொலிஸார் உடனடியாக விரைந்து சென்று ஆராய்ந்த பின்னர் விசாரணையை முடுக்கி விட்டுள்ள போதிலும் இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை.

இப்பாடசாலைக்கருகில் நீண்ட காலமாக சட்டவிரோதமான முறையில் சட்ட கசிப்பு விற்பனை செய்பவர்களின் சதி வேலையாக இது இருக்குமென பிரதேசத்தைச் சேர்ந்த தோட்ட மக்கள் ஆழ்ந்த கவலையுடன் தெரிவிக்கின்றனர்.



# சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

2020 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்து வப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவில் போட்டியிட்டு கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான, விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண் டோபுள்ளே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள்சக்தியோடு இணைந்து கொண்டார்.

இவர் கம்பஹா மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்திய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் பாரியாரா வார். பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ள இவர் கடந்த அரசாங்கத்தின் கீழ், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கோவிட் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் இரா ஜாங்க அமைச்சராகப் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.திருமதி பெர்னாண் டோபுள்ளே முன்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர் வாழ்வு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார்.





# இயந்திரத் துப்பாக்கியும் பிஸ்டலும் ஜெயிலரின் வீட்டில் இருந்து மீட்பு!

சிறைச்சாலையின் ஜெயிலர் ஒருவர் மதின்னாகொட ராஜகிரிய வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக் கிகள் மற்றும் தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித் துள்ளது.

ரி 56 ரக துப்பாக்கி, ஒரு மகசீன், 350 தோட்டாக்கள், மைக்ரோ ரக பிஸ் டல் துப்பாக்கி, மகசின், 9எம்எம் ரக 50 துப்பாக்கி தோட்டாக்கள், 5.56 ரக 8 ரவை தோட்டாக்கள், போதை பொருட்



கள், 700 மி.கி கஞ்சா, 200 மி.கி குஷ் போதை மருந்து ஆகியன அந்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் விளைவாக, கைத்துப் பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசார ணையில் சிறைக்காவலர் வைத்திருந்த ஏனைய துப்பாக்கிகள் பற்றிய தகவல் கள் வெளியாகின.

அதன்படி, சிறைக்காவலரின் வீட்டின் மேல்மாடியில் உள்ள அறையொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தத் துப்பாக்கிகள் மற்றும் போதைப்பொருள் களைக் கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ரணிலின் பக்கம் பாய்ந்தவர்களுக்கு எதிராக உடனடி ஒழுக்காற்று நடவடிக்கை இல்லை

## பின்வாங்கியது பொதுஜன பெரமுன கட்சி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேர்தலில் ஆதரவளிக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நூற்றி இரண்டு உறுப்பினர்களுக்கு எதிராக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் வரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பெரமுனவின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரை எதிர்க்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும், கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கவும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு அண்மையில் தீர்மானித்திருந்தது.

இதன்போது, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றி கொள்வது தொடர்பான செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்தியுள்ளதுடன்,




கட்சியில் இருந்து விலகிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய நேரத்தில் அவர்கள் நீக்கப்படுவார்கள் என்று பொதுச் செயலாளர் கூறினார்.

நாடாளுமன்றம் இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே நீடிக்கும் என்றும், இந்தக் காலக்கட்டத்தில் எம்.பி.க்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டால், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வருவதற்கு மேலும் கால அவகாசம் எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

# மட்டக்களப்பு மொட்டு கட்சி அமைப்பாளர் சந்திரகுமார் சஜித்துடன் இன்று இணைவு!

**(கனகராசா சரவணன்)**

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனை மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் இன்று ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

நீண்டகாலமாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனை மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக செயற்பட்டு வந்த ப.சந்திரகுமார் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டமையை அடுத்து அவருக்கு மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பதவியை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா கட்சி அலுவலகத்தில் வைத்து சம்பிரதாய பூர்வமாக வழங்கிவைத்தார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கட்சியின்...

பொன்சேகா அறிவித்துள்ள நிலையில், அக்கட்சியின் புதிய தவிசாளர் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்குவதற்குரிய கட்டுப்பணத்தை செலுத்தியுள்ள நிலையிலேயே பொன்சேகா தவிசாளர் பதவியையும், ஐக்கிய மக்கள் சக்தியின் களனித் தொகுதி அமைப்பாளர் பதவியையும் துறந்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்படவுள்ளார் என தெரியவருகின்றது.

### தமிழரசுத்...

தமிழரசு கட்சி யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான விடயங்கள் மற்றும் தமிழ் பொது வேட்பாளர் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக மதியத்துக்குப் பிந்திய அமர்வில் கலந்துரையாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், குகதாசன், சாணக்கியன் மற்றும் வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்பட கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி...

காலை 5:00 மணிக்கு சந்திப்பு என்று கூறப்பட்டது. எதற்காக என்று கேட்கப்பட்ட பொழுது பதில் கூறப்படவில்லை. இச் சந்திப்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த பிரதிநிதிகள் 7 பேர்களும் பங்கு பற்ற மாட்டார்கள்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை நடக்கக்கூடிய சந்திப்பில், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் 14 உறுப்பினர்களும் சந்திப்பில் கலந்து கொள்ள மாட்டார்கள். தேர்தல் வேலைகளில் மூழ்கி இருப்பதால், குறுகிய கால அழைப்பின் அடிப்படையில் நாளைய சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக கலந்து கொள்வது சிரமமாக இருக்கும். எதிர்காலத்தில் இது போன்ற அழைப்புகளை ஏற்று சந்திப்புகளில் கலந்து கொள்வது தொடர்பான முடிவை பொதுக் கட்டமைப்பு கூடி முடிவெடுக்கும்.

### வெள்ளி...

மறுநாள் 16 ஆம் திகதி முதல் தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி சஜித் பிரேமதாஸவின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் குருநாகலையில் நடைபெறவுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணியில் பங்காளிக்கட்சி தலைவர்களும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலை வெற்றிகொள்வதற்கு சஜித் தலைமையில் இவ்வாறு 100 பிரதானக் கூட்டங்கள் 25 மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்கும் கூட்டம் தொடர்பான அறிவித்தல்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.



# கொழும்புத் துறைமுகத்தில் அதிகாலையில் கப்பலில் தீ

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சரக்குக் கப்பலில் இன்று அதிகாலை தீ ஏற்பட்டதுடன் வெடிப்பும் ஏற்பட்டதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

துறைமுக தீயணைப்புப் பிரிவு உட்பட துறைமுக ஊழியர்கள் தீயைக் கட்டுப்படுத்தி அணைத்தனர் எனவும், தீயை அணைக்க முடியாவிட்டால் அது பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தீயினால் கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை மதிப்பிடப்படவில்லை எனினும் சரக்கு மற்றும் கப்பலுக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.



# கராஜில் கார் எரிந்து நாசம்

பெலியத்த குடாஹில்லெ ஜய மாவத்தையில் ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் ஒருவரின் கார் இன்று அதிகாலை தீயில் எரிந்து நாசமானதாக பெலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அதிகாரியின் வீட்டின் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் தீப்பிடித்துள்ளதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தீ பிடித்த கார் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ள நிலையில், காருக்கு யாராவது தீ வைத்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக் கடற்கொள்ளையர்கள் தமிழக மீன்வர்கள் மீது தாக்குதலாம்

தமிழ்நாட்டின் நாகை மாவட்டத்தில் வேதாரண்யம் அருகே கோடியக்கரை கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் எனத் தமிழகத்தில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக வேதாரண்யம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆறுகாட்டுத்துறையை சேர்ந்த மீனவர்கள் நேற்று சனிக்கிழமை மாலை பைபர் படகு மூலம் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதன்போது 04 படகுகளில் வருகைத்தந்த கடற்கொள்ளையர்கள் மீனவர்களை வழிமறித்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இலங்கை கடற்கொள்ளையர்களால் 700 கிலோ கிராம் நிறையுடைய மீன் வகைகள், வலை, ஜிபிஎஸ் கருவி, கையடக்கதொலைபேசிகள், அணிந்திருந்த தங்க நகைகள், மோதிரம் உள்ளிட்ட பொருட்கள் பறித்து செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்கொள்ளையர்கள் தாக்குதலால் காயமடைந்த இந்திய மீனவர்கள் நால்வரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றனர் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் வேதாரண்யம் கடலோர காவற்படை விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஊழலின் உச்சம்

இலங்கையின் பொருளாதாரப் பேரழிவுக்கு - பின்னடைவு நிலைக்கு - முக்கிய காரணங்களில் ஒன்று ஊழலும் மோசடியும் என்பது கண்கூடான விடயம்.

ஊழலையும் மோசடியையும் ஒழிக்காமல் நாடு பொருளாதார மீட்சி பெறுவது துர்லபம் என்பது வெளிப்படையானது.

ஊழல், மோசடி ஒழிப்பை வெறு பிரசாரமாக பயன்படுத்தும் அரசாங்கங்கள், மறுபுறத்தில் அதிலேயே தாமும் ஊறிக் கிடக்கின்றன, இன்னும் அந்த போக்கையே தொடர்கின்றன என்பது தான் இலங்கையின் இன்றைய துரதிஷ்ட நிலைமையாகும்.

“ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கைகள், ஊழல் புலனாய்வுச் சுட்டெண்ணின் அடிப்படையில் இலங்கை இன்னும் மோசமான கட்டத்தை அடைந்து விட்டது என்பதை ருசுப்படுத்தி நிற்கின்றன.

ஆனால் நாட்டின் தலைவரோ ஒரு புறம் ஊழல், மோசடிக்கு இடமளித்து, வாய்ப்புக் கொடுத்துக் கொண்டே மறுபுறம் ஊழல் எதிர்ப்புவாதியாகத் தம்மை வெளிப்படுத்தி நாடகமாடிக் கொண்டிருக்கின்றார்.

‘ஊழல் எதிர்ப்பை வெறும் அரசியல் கோசமாக மட்டும் பயன்படுத்திய காலம் மலையேறி விட்டது. ஊழலை ஒழிக்கப் பல புரட்சிகர நகர்வுகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் திருடர்களை பிடிப்பதற்காக பல சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது’’ - என்றெல்லாம் மக்கள் காதில் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றார் நமது அரசுத் தலைவர்.

ஆனால் பெரும் ஊழலின் ஊற்றிடமே அவரது அரசு மையம்தான். அங்கு இருந்துதான் ஊழலும் மோசடியும் பிரவாகம் எடுக்கத் தொடங்குகின்றன என்பதை மக்கள் இப்போது நன்கு புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

மதுபான சாலை பெர்மிட்டுகளின் பெயரில் அவரின் அரசு நடத்தும் பெரும் தில்லுமுல்லு ராஜ்ஜியம் - ஊழல், மோசடி - மக்களுக்கு இப்போது அத்துபடி. தாமும், தமது அரசும், ஆளும் தரப்பும் என்று மட்டுமல்லாமல், எதிரணியினரையும் கூட இந்த பெரும் ஊழல் சேற்றில் இழுத்து விழுத்தி, நாட்டை அந்த ஊழல் மோசடிச் சாகரத்தில் இருந்து மீள முடியாத பேரழிவு நிலைக்கு கொண்டு சென்ற பெருமை இப்போது அவரையே சாரும்.

அவரின் நல்லாட்சி அரசில் முன்னெடுக்கப்பட்ட பிணைமுறி ஊழலை விட இப்போது விசா வழங்கல் விடயத்தில் முன்னெடுக்க முனையப்பட்ட ஊழல் பல மடங்கு அதிகமானது. பல்லாயிரம் கோடி ரூபா சூறையாட வழி வகுத்தது.

இவையெல்லாம் மக்களுக்கு நன்கு தெரியும். ஆதலால் ஊழல் ஒழிப்பு பற்றிய அவரது உபதேசங்கள் சாத்தான் ஓதும் வேதங்கள் என்றே மக்கள் நம்புகின்றனர்

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கைகளின்படி -

ஊழல் புலனாய்வுச் சுட்டெண்ணில் 2002ஆம் ஆண்டு உலக நாடுகளில் இலங்கை 52ஆவது இடத்தைப் பெற்றிருந்தது. 2020ஆம் ஆண்டில் 94ஆவது இடத்துக்கும், 2022ஆம் ஆண்டு 101ஆவது இடத்துக்கும் அது தள்ளப்பட்டது எனப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இந்த சுட்டெண் படி 2023 இல் இலங்கை 115 ஆவது இடத்தை எட்டியுள்ளது.

இவ்வாறாக ஊழல் புலனாய்வு சுட்டெண்ணின் படி உலகில் உள்ள 180 நாடுகளில் இலங்கை 115 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இது இலங்கையில் ஊழல் உச்ச மட்டத்தை எட்டியிருப்பதையே காட்டுகிறது.

இந்த அறிக்கையின்படி, இந்தியா, பூட்டான், மாலைதீவு, நேபாளம், சீனா போன்ற நாடுகள் இலங்கையை விட சிறந்த நிலையைக் காட்டுகின்றன.

இது இலங்கை மக்கள் மகிழக் கூடிய நிலைமை அல்ல.

# இந்திய மீனவர் அத்துமீறலை தடுப்பதற்கு முடியவில்லை!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)




இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்பினுல் வருவதை தடுக்க அரசுக்கு அழுத்தத்தை கொடுக்கின்றோம். கடற்படைக்கும் அழுத்தத்தை கொடுக்கின்றோம். எனினும் அவர்களின் அத்து மீறிய வருகையை நிறுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். இந்த விடயத்தில் தமிழக அரசு அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னாரில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை தொடர்பாக நாங்கள் தொடர்ந்தும் பேசி வருகிறோம்.

நாங்கள் தொடர்ச்சியாக முன் வைக்கின்ற கோரிக்கைகளை உதாசீனம் செய்யும் வகையில் இந்திய மீனவர்களின் அத்த மீறிய நடவடிக்கையும் அதனால் கைதும் இடம் பெறுகின்றன.

குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் இவ்வாறான அத்துமீறலும், தடை செய்யப்பட்ட தொழில் முறைகளையும் செய்யாதீர்கள். அதை நிறுத்தி வையுங்கள். நாங்கள் உங்களுடன் பேச விரும்புகின்றோம். அதற்கு முன்னர் கலந்துரையாடல் ஒன்றை மேற் கொள்ளுவோம் என்று நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தாலும், அக்கோரிக்கையை இந்திய மீனவர்கள் உதாசீனம் செய்து வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் மன்னார் தெற்கு கடல் பகுதியில் தொழிலில் ஈடுபட்ட போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தியை இந்திய ஊடகங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

கடந்த காலங்களில் அவர்கள் ஏற்றுக் கொண்ட வரலாறு இல்லை. தற்போது அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இவ்வாறான சூழ்நிலையில் அவர்கள் மன்னார் கடற்பரப்பினுல் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் முறைமையையும், இவ்வாறு உள் நுழைகின்றமையையும் இவர்கள் நிறுத்திக் கொள்வதற்கு நாங்கள் எத்தனையோ நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

அரசிற்கு அழுத்தத்தை கொடுக்கின்றோம். கடற்படைக்கும் அழுத்தத்தை கொடுக்கின்றோம்.

எனினும் அவர்களின் அத்து மீறிய வருகையை நிறுத்த முடியாத நிலையில் இருக்கிறோம்.– என்றார்.






# செவிப்புலன் வலுவிழந்தோர் நிறுவனத்தின் வெள்ளி விழா





**(ஹஸ்பர் ஏ.எச்.)**

செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்வு நேற்று (10) திருகோணமலையில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அரங்கில் நடைபெற்றது.

வெள்ளி விழாவை முன்னிட்டு கிரிக்கெட் உதைபந்தாட்டம் முதலிய பல விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிவில்களும் இதன்போது வழங்கப்பட்டன.

நிகழ்வின் முதன்மை விருந்தினரான திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின் விருந்தினர் உரையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன், வெளிநாடுகளில் செவிப்புலன் அற்றோர் எப்படி எல்லாத் துறைகளிலும் தங்களை நிரூபித்து முன்னிலை வகிக்கின்றார்களோ அதே போன்று நமது நாட்டிலும் இவர்கள் சகல துறைகளிலும் சாதிக்க உறுதுணையாக நிற்பேன் என்றார்.

இந்த நிகழ்வைச் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் காப்பாளர் பாலசுப்ரமணியம், செயளாலர் அன்றனி வியனகே, கனடாவில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பால நாயகம் உள்ளிட்டோர்களால் சிறப்பான முறையில் ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.





# தொகை மதிப்பீடு தொடர்பாக தெளிவூட்டல் செயலமர்வு!







(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிசன வீட்டு வசதிகள், தொகை மதிப்பீடு போன்ற விடயங்கள் தொடர்பான கணக்கெடுப்பு தெளிவூட்டல் செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட புள்ளி விவரவியலாளர் த.ஜெய்தனனின் ஏற்பாட்டில் சன்சைன் கிரான்ட் விடுதியில் இடம் பெற்றது.

தொகை மதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவித் தொகை மதிப்பு ஆணையாளர்களுக்கான தெளிவூட்டல்கள் இதன்போது வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த முறை 14 ஆவது குடிசன, வீட்டுவசதிகள் தொகை மதிப்பு மேற்கொள்ள விருப்பதால் அவற்றை திறம்பட மேற்கொள்வதற்குத் தேவையான தெளிவூட்டல்கள் மற்றும் வழிகாட்டங்கள் இதன் போது விரிவாக வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீ காந்த், வெளிக்கள முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.எச்.மன்சூர், மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஜெ.எஸ்.லியனகே, பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், புள்ளி விவர உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவருடன் பொது மக்கள் பேசுவதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து சவூதி அரேபியாவில் வாழும் சகல பிரஜைகளும் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவருடன் நேரடியாகப் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கில் ரியாதில் உள்ள இலங்கை தூதரகம் "உங்கள் தூதுவருடன் நீங்களும் உரையாடலாம்" என்ற பெயரில் சமூகத்தை நோக்கிய ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்கின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கான சம்பிரதாய பூர்வமான ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இது இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து சவூதி அரேபியாவில் வாழும் சகல பிரஜைகளும் தமது பிரச்சினைகளை முன்வைத்து தூதுவருடன் கலந்துரையாடுவதற்கும், சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவரை நேரடியாகத் தொடர்பு கொண்டு தமது ஆலோசனைகளை முன்வைப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

இந்தச் சந்திப்பு இரு வாரங்களுக்கு ஒருமுறை வியாழக்கிழமை தினங்களில் இடம்பெறும்.

ரியாதில் உள்ள இலங்கைத் தூதரகம் இந்தப் புதிய முன்னெடுப்பை இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 ஆண்டு பூரணமாவதைக் கொண்டாடுவதுடன் இணைந்ததாக அறிமுகப் படுத்துகிறது.



# போலி நாணயத்தாள்களைப் பயன்படுத்திய தாய், மகள் உட்பட மூன்று பேர் கைதாகினர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

போலி நாணயத்தாள்களைப் பயன்படுத்திக் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்த தாய், மகள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அகலவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த தாயும் 16 வயதுடைய மகளும், வாடகை காரொன்றின் 43 வயதுடைய சாரதியுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும், புளத்சிங்கள, கல்வெல்லாவ பிரதேசத்தில் உள்ள கடையொன்றில் 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்றைக் கொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்து மீதமுள்ள பணத்தையும் பெற்று வாடகை காரில் அகலவத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் போது பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து போலி நாணயத்தாளை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் விற்பனை சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், அகலவத்தை, மத்துகம மற்றும் புளத்சிங்கள ஆகிய பகுதிகளில் நீண்ட காலமாகப் போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அகலவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






## வலதுசாரிகளின்திட்டமிட்ட வன்முறை:

# இங்கிலாந்தில் தொடரும் பதற்றம்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா-**

ஒருமாத தொழிக்கட்சி ஆட்சியின் பின்னர், கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப் பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. இதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியாவில் தீவிர வலதுசாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்த வன்முறைகளை நடத்துவதாக புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கண்டித்துள்ளார்.

மூன்று சிறுமிகள் கொலை

கடந்த மாதம் ஜுலை 29 ஆம் திகதியன்று பிரிட்டனின் சவுத் போர்ட் நகரில் நடைபெற்ற டெய்லர் சுவிஃப்ட் யோகா மற்றும் நடனப் பயிலரங்கில் கலந்து கொண்ட மூன்று சிறுமிகள் கொல்லப்பட்டனர்.

இதன்பின் இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தின் பல பகுதிகளில் வெளிநாடுகளில் இருந்து குடியேறுபவர்களுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டங்கள் பல இடங்களில் வன்முறையாக மாறின. இதனால் பிரிட்டன் முழுக்க கலவரம் ஏற்பட்டுள்ளது.

ஒருமாத தொழிட்கட்சி ஆட்சி

பிரித்தானியாவில் கடந்த ஜுலை மாதம்தான் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆட்சியில் இருந்த கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. எதிர்க் கட்சியாக இருந்த தொழிலாளர் கட்சி மிகப் பெரிய வெற்றி பெற்ற நிலையில், கெய்ர் ஸ்டார்மர் பிரதமரானார்.

இதற்கிடையே தொழிலாளர் கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப் பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. அதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### வன்முறைக்கு என்ன காரணம்

கடந்த வாரம் வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள சவுத் போர்ட் என்ற இடத்தில் உள்ள குழந்தைகள் நடன வகுப்பில் திடீர் தாக்குதல் நடந்தது. இதில் மூன்று சிறுமிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். பிரிட்டனில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதே இதுபோன்ற தாக்குதல்களுக்குக் காரணம் எனக் கூறி அங்கே பல நகரங்களில் போராட்டங்கள் வெடித்தன.

மூன்று சிறுமிகள் உயிரிழக்கக் காரணமாக இருந்த அந்த தாக்குதலில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டில் இருந்து குடியேறியவர் என்றும் அவர் ஒரு இஸ்லாமியர் என்றும் தவறான தகவல் பரவியது. இதனால் குடியேற்றத்தை எதிர்க்கும் குழுக்கள் முஸ்லீம் எதிர்ப்பு குழுக்கள் திடீரென இந்த போராட்டங்களை ஆரம்பித்தன. அதுவே இப்போத வன்முறையாக மாறியுள்ளது.

அதேநேரம் இந்தச் சம்பவத்தில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டைச் சேர்ந்தவர் இல்லை என்றும் அவர் பிரிட்டனில் பிறந்தவர் தான் என்றும் பொலிஸார் விளக்கமளித்துள்ளனர். மேலும், கைதான நபரின் குடும்பம் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும், இதை ஏற்க மறுத்து அங்கே போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இங்கிலாந்தில் லிவர்பூல், பிரிஸ்டல், ஹல் மற்றும் ஸ்டோக்-ஆன்-ட்ரென்ட் மற்றும் பிளாக்பூல் எனப் பல நகரங்களில் இந்த வன்முறை போராட்டங்கள் பரவியுள்ளன. இந்த விவகாரத்தில் பொலிஸார் நூற்றுக்கும் மேற்பட்டோரை இதுவரை கைது செய்துள்ளனர்.

### வலதுசாரி இயக்கத் திட்டம்

மான்செஸ்டர் மற்றும் பெல்ஃபாஸ்டில் தாக்குதல்கள் நடந்த நிலையில், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சூறை

தொடர்ச்சி▼





## வலதுசாரிகளின்திட்டமிட்ட வன்முறை:

# இங்கிலாந்தில் தொடரும் பதற்றம்!

தொடர்ச்சி▲

யாடப்பட்டன. லிவர்பூலில் ஒரு நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த வன்முறையில் பொலிஸார் பலரும் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே தீவிர வலது சாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்தப் போராட்டங்களை நடத்துவதாக அந்த நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் விமர்சித்துள்ளார்.

மேலும், சிறுமிகள் உயிரிழக்கக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்த அவர், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

### கன்சர்வேடிவ் கட்சியும் வலதுசாரிகளும்

கன்சர்வேடிவ் கட்சியே இங்கிலாந்தை தீவிர வலதுசாரி வன்முறைக்கு திறந்துள்ளனர் என்ற குற்றஞ்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

தீவிர வலதுசாரி வன்முறைக்கு காரணம் கன்சர்வேடிவ்கள் என்று இங்கிலாந்து பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முன்னாள் ஆலோசகர் டேம் சாரா கான், இவ்வாறு தெரிவித்த கருத்து பலத்த சர்ச்சையை உருவாக்கி உள்ளது.

முன்னைய கன்சர்வேடிவ் அரசாங்கம் கலாச்சார வெறுப்பு நிகழ்ச்சி நிரலுடன் தீயை மூட்டுவதன் மூலமும், நாட்டின் சில பகுதிகளில் வெடித்துள்ள தீவிர வலதுசாரி வன்முறைக்கு இங்கிலாந்தை பரந்த அளவில் திறந்து விட்டதாக, டோரி பிரதம மந்திரிகளின் தீவிரவாதம் குறித்த மூத்த ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மே மாதம்–வரை ரிஷி சுனக்கின் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் மீள்தன்மைக்கான சுயாதீன ஆலோசகராக இருந்த டேம் சாரா கான், தெரசா மே மற்றும் போரிஸ் ஜான்சன் இருவரின் கீழும் தீவிரவாத எதிர்ப்பு ஆணையராக செயல்பட்டவர்.

தீவிர வலதுசாரிகள் சமூக ஊடகங்களில் வன்முறையைத் தூண்டுவதற்கு சட்டத்தில் உள்ள இடைவெளிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதே நேரத்தில் பல அரச நிர்வாகங்களின் உயர்மட்ட அரசியல்வாதிகள் கலாச்சாரப் வெறுப்பகளை நடத்துவதன் மூலம் ஆதாயத்தைப் பெற முயன்றனர், எனக் கான் கூறியுள்ளார்.

### இங்கிலாந்து பிரதமர் கண்டனம்

இங்கிலாந்தின் பிரதம மந்திரி கெய்ர் ஸ்டார்மர் ஞாயிற்றுக்கிழமை தீவிர வலதுசாரி வன்முறைகளை கண்டனம் செய்தார். பல நாள்கள் வன்முறையான குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் ஹோட்டல் மீதான தாக்குதலில் உச்சக்கட்டத்தை அடைந்தன. குற்றவாளிகள் சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்வார்கள் என்று கூறினார்.

இந்த வார இறுதியில் நாங்கள் கண்ட தீவிர வலதுசாரி வன்முறையை நான் முற்றிலும் கண்டிக்கிறேன் என்று பிரதமர் ஸ்டார்மர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த வன்முறையில் பங்கேற்றவர்கள் சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

2011 வன்முறையின் பின்னர்

அவர்களின் தோல் நிறம் அல்லது மத நம்பிக்கைகள் காரணமாக இந்த கோளாறு மக்களை குறிவைத்ததாக அவர் கூறினார். மேலும் இங்கிலாந்தின் தெருக்களில் ஒழுங்கீனத்தை சட்டப்பூர்வமாக்க எந்த வழியும் இல்லை என்றார்.

கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிராக தனது தொழிற்கட்சி ஒரு தீர்க்கமான தேர்தல் வெற்றியைப் பெற்ற பின்னர் ஒரு மாதத்துக்கு முன்பு பிரதமராக பதவியேற்றார் ஸ்டார்மர்.

பிரித்தானியைவைப்பொறுத்தவரைக் கடந்த 2011 இல் கடைசியாக மிகப் பெரிய வன்முறை ஏற்பட்டது. அப்போது லண்டனில் கறுப்பினத்தவர் ஒருவரை பொலிஸார் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து பல ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கிய போராட்டங்களை நடத்தினர். அப்போது சில இடங்களில் வன்முறை வெடித்தன. சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாரிய வன்முறை வெடித்துள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.



# புத்தளம் திகழி முஸ்லிம் ம.வி. கரப்பந்தாட்ட அணி சம்பியன்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

புத்தளம் வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்கு உட்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தளம், திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பயிற்சி மற்றும் வழிகாட்டல் வழங்கிய உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.பாரிஸ், உடற்கல்வி பயிற்சியாளர் எம்.என். எம் டில்ராஸ் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோருக்கு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.ஏ.றஸாக் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.



# நூலகங்களை மேம்படுத்த கல்முனையில் நடவடிக்கை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ், சம்மந்தம்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை ஆராயும் கலந்துரையாடல் வியாழக்கிழமை (08) மாநகர சபை கூட்ட மண்டபத்தில் ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களில் நிலவி வரும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாக நூலகர்கள் மற்றும் நூலகப் பணியாளர்களிடம் கேட்டறிந்து கொண்ட ஆணையாளர், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட வேலைத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

இந்த நிலையில் நூலகங்களின் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கும் தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், களஞ்சியக் காப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கினார்.

அத்துடன் போதிய வசதிகள், ஆளணிகள் இருந்தும் சில நூலகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக வாசகர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் நூலகர்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் உதாசீனம் செய்யாமல், முறையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஆணையாளர், தவறிழைக்கும் பணியாளர்கள் மீது எவ்வித தயவுமின்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

இந்தக்கலந்துரையாடலில்கல்முனை மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்மன், விடய உத்தியோகத்தர் ஏ.ஆர். நஸ்ரின் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.



# மன்னார் றோட்டரிக் கழகத்தால் மாபெரும் குருதிக்கொடை முகாம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு மன்னார் றோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் சங்கர் நினைவாக மன்னார் பொது வைத்தியசாலை இரத்த வங்கி முகாமையாளர் அமரசேகர மேற்பார்வையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் வெள்ளிக்கிழமை இரத்ததானம் இடம்பெற்றது.

மன்னார் றோட்டரி கழகத்தில் தலைவர் திருமலைராசா தனேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் தொடர்ச்சியாக குருதி வழங்கும் கொடையாளர்கள் என 40 இற்கும் மேற்பட்டவர்கள் குதியை வழங்கியிருந்தனர்.

இதன்போது குருதிக் கொடையாளர்களுக்குக் குருதிக்கொடைக்கான பதிவுப் புத்தகம், அத்தாட்சிப் பத்திரம் மற்றும் நினைவுச் சின்னம் போன்றவை வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு மன்னார் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், மன்னார் அஞ்சல் அலுவலகத்தினர், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மன்னார் கிளையினர், முதியோர் நலன் சார்ந்து செயற்படும் டெவ்லிங் நிறுவனத்தினர், மன்னார் றோட்டரிக் கழகத்தின் உறுப்பினர்களது பங்களிப்புடன் இடம்பெற்றது.









# டேக்வாண்டோ சுற்றுப் போட்டி; கல்முனை ஸாஹிறா சாதனை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு வெபர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசா லைகளுக்கிடையிலான டேக்வாண்டோ (வயநமறழனெழ) சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடி இந்த ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவிவாகியுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு இக் கல்லூரி ஏற்படுத்தியிருந்த சாதனையை (41 புள்ளிகள்) கடந்த 2023 ஆம் ஆண்டு முறியடித்து (42 புள்ளிகள்) மீண்டும் 2024 ஆம் ஆண்டு முறி யடித்து ஆண்களுக்கான முழுநிலை சம்பியன்களாக (48 புள்ளிகள்) ஆக தெரிவு செய்யப்பட்டுச் சாதனை படைத் துள்ளனர்.

இதில் 7 தங்கம், 6 வெள்ளி, 6 வெண் கலம் அடங்களாக மொத்தம் 19 பதக்கங் களை பெற்றுள்ளனர். 13 வீரர்கள் தேசிய போட்டிக்கும் தெரிவாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இந்த அடைவுக்காக உறுதுணையாய்



இருந்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப் படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர், இணைப்பாடவிதானத்துக்குப் பொறுப் பான பிரதி அதிபர் ஏ.எல்.எம்.தன்ஸீல், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி நெறிப்படுத்திய பாடசாலையின் ஆசிரியர் மற்றும் பிரதம பயிற்றுவிப் பாளர் யூ.ஏல்.எம்.இப்றாஹிம், மற்றும் உதவி பயிற்றுவிப்பாளர்கள் ஜே.ஏ.சும்ட், ஏ.ஏ.ஹமீம் ஏ.ஏ.ஹம்தான் , ஏ.பீ.ஏ.சிஹாப் மற்றும் போட்டிகளில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் கல்வி சமூகம் பாராட்டுக்களையும் வாழ்த் துக்களையும் தெரிவித்துள்ளது.

# அலிகம்பே பிரதேசத்தில் ஆரம்ப மருத்துவ பிரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை அலிகம்பே பிரதேசத் தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அதனூடாக அந்தப் பகுதி மக்களுக்குச் சுகாதாரச் சேவை களை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னாள் பிராந்திய பணிப்பாளர்கள், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன் னாள் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளி தரன் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா ஆகி யோரின் பூரண ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத் திட்டம் தற்போதைய கல்முனை பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீனாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அலிகம்பே பிரதேச மக்களின் சுகா தார நலன்கருதி அங்குள்ள கத்தோ லிக்க தேவாலய அருட்தந்தை எஸ்.ஜெக நாதன் மற்றும் அந்தப் பகுதிப் பொது நிறுவனங்களின் முயற்சியின் பலனாக சுமார் 25 மில்லியன் ரூபா நிதியில் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு, அது அண்மையில் சுகாதார திணைக்களத் துக்கு கையளிக்கப்பட்டது.

இந்தக் கட்டடப் பணிகளை முன்னெ டுத்த தொண்டு நிறுவனத்தினர் அதற்கு நிதியுதவிகளை வழங்கிய ஜப்பான் நாட்டு பிரதிநிதிகள் அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளரை சந்தித்து அலிகம்பே மக்க ளின் சுகாதார மேம்பாடு தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது சுகாதார தேவைகளுக் காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கான தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பாக வும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிராந்திய கண் காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் கலந்துகொண்டார்.



# கிழக்கு மாகாணக் கராத்தே கல்முனை பற்றிமா வெற்றி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கராத்தே போட்டிகளில் கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவர்கள் 02 தங்கப் பதக்கங்களையும், 08 வெள்ளிப் பதக்கங்களையும், 03 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று கல்முனை வலயத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர். அத்தோடு தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



திருகோணமலையில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட கராத்தே போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், அவர்களை பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் எஸ் .பாலுராஜ், ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்கள், உதவி அதிபர்கள், பிரதி அதிபர்கள் மற்றும் அதிபர் ஆகியோருக்குப் பாடசாலைக் கல்விச் சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.





# அரச சேவை திணைக்களக் கிரிக்கெட் தபால் திணைக்களம் சம்பியனானது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையிலுள்ள அரச சேவை திணைக்களங்களுக்கு இடையில் மகர சிறைச்சாலை மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கை தபால் திணைக்களம் 30 ஓட்டங்களால் வெற்றியீட்டி 2024 ஆம் ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தபால் திணைக்களத்துக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையிலான இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை தபால் திணைக்கள அணியினர் இந்த ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை மின்சார சபை அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

இலங்கை தபால் திணைக்களத்தின் வெற்றிக்கு காரணமான சகலருக்கும் இலங்கை தபால் திணைக்கள விளையாட்டுக்கழக தலைவர் தம்மிக்க ஏக்கநாயக வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.




# சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் பாசிப் பயறு பயிர்ச்செய்கை ஆரம்பம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை பிரதேசத்தின் பின்தங்கிய கிராம புறங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாய அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் பாசிப் பயறு பயிர்ச்செய்கை வேலை திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வானது கல்லைரச்சல் -2 கிராம சேவகர் பிரிவில் மயில் ஓடை வட்டையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனீபா தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குக் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரிகள் (சம்மாந்துறை, மல்வத்தை) விவசாய போதனாசிரியர் (மத்தி, மாகாணம்) பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# 30 வருட தாதிய சேவை; சிவநாதனுக்கு பாராட்டு!

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்திய சாலையில் 30 வருட தாதிய சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் காரைதீவைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் கந்தசாமி சிவநாதனுக்கு பிரியாவிடை நிகழ்வு வைத்தியசாலையில் நடந்தது.

வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ரங்கே சந்திரசேன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். சமீம், நிர்வாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள், தாதிய பரிபாலகர் ரி.சசீந்திரன் உள்ளிட்ட பலரும் பாராட்டி உரையாற்றினர்.

சிவநாதன் கடந்த முப்பது வருட காலமாக பல பிரிவுகளில் கடமையாற்றி இறுதியாக சத்திர சிகிச்சை பிரிவில் பொறுப்பு தாதிய உத்தியோகத்தராக சேவையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# திறன் வகுப்பறைத் திறப்பு விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

நவீன கற்பித்தல் முறையை ஊக்குவிக்கும் நோக்கில் சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு., அம்பாறை அமைப்பின் ஒருங்கிணைப்பில் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான திறன் வகுப்பறை வியாழக்கிழமை அதிபர் எஸ்.தியாகராஜா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.



அமரர் கலாநிதி சுதன் சுதர்சன் நினைவாக சுமதி சுதர்சன், ஷோபனா சுதர்ஷன், நீலன் சுதர்சன் ஆகியோரின் நிதியுதவியில் இந்தத் திறன் வகுப்பறை மனிதநேய அறக்கட்டளை ஸ்தாபக தலைவர் கை.அரவிந்தனின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது.

அதிதிகளாக மனிதநேய அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர்களான ஆர். சிரஞ்சீவி, திருமதி சாந்தி சிரஞ்சீவி , உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, மற்றும் அம்பாறை விஞ்ஞான ஒன்றிய ஸ்தாபக தலைவர் தி.கோபிநாத், இணைப்பாளர் வ.யதுர்சன், ஆசிரிய ஆலோசர்களான பி. மோகன், கே. சந்திரகுமார் உள்ளிட்டவர் கலந்து கொண்டனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் கே. மதிவண்ணன் பழைய மாணவர் மன்ற தலைவர் லோஷனன் விஞ்ஞான ஒன்றிய உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மனித நேயம் அமைப்பின் இந்தச் சேவையைப் பாராட்டி பாடசாலை சமூகத்தால் திரு. திருமதி சிரஞ்ஜீவி தம்பதியினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.



# இந்திய எல்லைகளில் குவியும் பங்களாதேஷ் இந்துக்கள்

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர் சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. இதில் 560 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பிரதமர் ஷேக் ஹசீனாகடந்த 5 ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார். தற்போது, நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் பங்களாதேஷ் இடைக்கால தலைவராக பொறுப்பேற்று உள்ளார்.

மாணவர்கள் போராட்டம் ஓய்ந்தாலும் பங்களாதேஷ் முழுவதும் இந்துக்கள் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. சுமார் 17 ஆயிரம் இந்து குடும்பங்கள் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இந்துக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர்.

இந்தியாவும் பங்களாதே/ம் 4,096 கிலோ மீற்றர் எல்லையை பகிர்ந்துள்ளன. மேற்குவங்கம், திரிபுரா, அசாம், மிசோரம், மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்கள் பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ளன. இந்த 5 மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் குவிந்து வருகின்றனர்.

இது குறித்து இந்திய எல்லை பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

மேற்கு வங்கத்தின் ஜல்பைகுரி, பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ளது. இங்கு 50 மீட்டர் தொலைவு இடைவெளியில் பி.எஸ்.எப். வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை சுமார் 500 இற்கும் மேற்பட்ட வங்கதேச மக்கள் இந்திய எல்லைக்குள் நுழைய முயன்றனர். அவர்களை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினோம்.

மேகாலயா மாநிலம் வங்கதேசத்துடன் 443 கிலோ மீற்றர் தொலைவை பகிர்ந்துள்ளது. இங்கு பெரும்பாலான பகுதிகளில் தடுப்பு வேலி இல்லை. வழக்கமாக சுமார் 300 இற்கும் மேற்பட்ட பங்களாதேஷ் மக்கள் நாள்தோறும் மேகாலயாவுக்கு வந்துவிட்டு திரும்பி செல்வது வழக்கம். தற்போது வங்கதேச மக்களின் வருகை முழுமையாக தடுக்கப்பட்டு உள்ளது.

மிசோரம் மாநிலம் பங்களாதேஷ் 273 கிலோ மீற்றர் தொலைவை பகிர்ந்துள்ளது. இது மலைப்பகுதி என்பதால் ஊடுருவலை தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இந்தியாவின் திரிபுரா மாநிலம், பங்களாதேஷின் எல்லைப் பகுதிகளில் 8 சோதனைச் சாவடிகள் உள்ளன. இந்த சோதனை சாவடிகள் வழியாக நாள்தோறும் நூற்றுக்கணக்கான வங்கதேச மக்கள் இந்தியாவுக்குள் நுழைவது வழக்கம். தற்போது வங்கதேச மக்களின் வருகை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு உள்ளது.

அசாமில் இருந்து வங்கதேசத்துக்கு பாரக் நதியின் வழியாக நாள்தோறும் மாடுகள் கடத்தப்படுவது வழக்கம். தற்போது பிஎஸ்எப் வீரர்களின் பலத்த பாதுகாப்பு காரணமாக மாடுகள் கடத்தல் முற்றிலுமாக தடுக்கப்பட்டு உள்ளது.

அசாதாரண சூழல் காரணமாக மேற்குவங்கம், திரிபுரா உள்ளிட்ட 5 மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான வங்கதேச இந்துக்கள் குவிந்து வருகின்றனர். அவர்களிடம் நிலைமையை எடுத்துக் கூறி திருப்பி அனுப்பி வருகிறோம். இவ்வாறு எல்லைப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

திரிபுராவை சேர்ந்த விஎச்பி மூத்த தலைவர் சவுரவ் காந்தி தாஸ் தெரிவிக்கையில்,

பங்களாதேஷ் இந்துக்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். இதுதொடர்பாக பி.எஸ்.எப். படையின் கிழக்கு பிராந்திய கூடுதல் இயக்குநர் தலைமையில் உயர்நிலைக் குழுவை அமைக்க வேண்டும்.

பங்களாதேஷில் 32 சதவீதமாக இருந்த இந்துக்களின் மக்கள் தொகை தற்போது 8 சதவீதமாக குறைந்திருக்கிறது. தற்போது வங்கதேச இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுக்க சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஓங்கி குரல் எழுப்ப வேண்டும்.”– என்றார்.

சனாதன உரிமைகள் கூட்டமைப்பின் மூத்த தலைவர் சந்தன் சக்கரவர்த்தி கூறுகையில்,

““திரிபுரா, மேற்குவங்கம், மேகாலயா, அசாம் மாநிலங்களில் மருத்துவ சிகிச்சைக்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான வங்கதேச மக்கள் வருகின்றனர். சர்க்கரை, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கு அந்த நாடு இந்தியாவை முழுமையாக சார்ந்திருக்கிறது. இவற்றை முன்னிறுத்தி இந்துக்கள் மீதான தாக்குதல்களை தடுக்க வங்கதேசத்துக்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்துக்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த வங்கதேச இடைக்கால அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் வங்கதேச மக்கள் இந்தியா வருவதை நாங்கள் தடுப்போம். வங்கதேச பொருட்களை முழுமையாக புறக்கணிப்போம்.”– என்றார்.



## சித்தராமையா பதவி விலகும் வரை போராட்டம்: முன்னாள் முதல்வர் எடியூரப்பா

# திட்டவட்டம்!

கர்நாடக முதல்வர் சித்தராமையாவின் மனைவி பார்வதிக்கு சொந்தமான 3.9 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்திய மைசூரு நகர மேம்பாட்டு கழகம் (எம்.யு.டி.ஏ), அதற்கு மாற்றாக 14 வீட்டு மனைகளை அவருக்கு வழங்கியது. கையகப்படுத்திய நிலத்தின் மதிப்பைவிட, ஒதுக்கப்பட்ட நிலத்தின் மதிப்பு பன்மடங்கு அதிகமாக இருந்ததால் சர்ச்சை ஏற்பட்டது.

இதில் முதல்வர் சித்தராமையா பல கோடி ரூபா முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டிய பா.ஜ.கவும், ம.ஜ.தவும் மைசூரு நோக்கி பாதயாத்திரை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே, சமூக ஆர்வலர்கள் 2 பேர் சித்தராமையாவுக்கு எதிராக பொலிஸ் புகார் அளித்துள்ளனர். இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியதால் ஆளுநர் தாவர்சந்த் கெலாட் விளக்கம் கேட்டு சித்தராமையாவுக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

இதற்கு மறுப்பு தெரிவித்து சித்தராமையா விளக்கம் அளித்தார். இந்த நிலையில் மத்திய அமைச்சர் குமாரசாமியும் முன்னாள் முதல்வர் எடியூரப்பாவும் பா.ஜ.கவின் பாதயாத்திரையில் கூட்டாக பங்கேற்றனர்.

பின்னர் குமாரசாமி பேசுகையில்,

“முதல்வர் சித்தராமையா ஊழலில் ஈடுபட்டிருப்பது 100 சதவீதம் உறுதியாகியுள்ளது. விதிமுறையை மீறி தனது மனைவிக்கு சாதகமாக நடந்துகொண்டுள்ளார். அவர் நேர்மையான அரசியல்வாதியாக இருந்தால் உடனடியாக தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்திருக்க வேண்டும்.““ – என விமர்சித்தார்.

இதைத் தொடர்ந்து எடியூரப்பா பேசுகையில்,

“கர்நாடகாவில் பழங்குடியினர் மேம்பாட்டு ஆணையம், பட்டியலினத்தவர் மேம்பாட்டு நிதி, நிலம் ஒதுக்கீடு ஆகியவற்றில் சித்தராமையா முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார். இது குறித்து சி.பி.ஐ. விசாரித்தால் அவர் சிறைக்கு செல்ல வேண்டியிருக்கும். அதனாலேயே வழக்கை, சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற மறுக்கிறார்.

சித்தராமையா முதல்வர் பதவியை இராஜினாமா செய்யும் வரை பா.ஜ.க, ம.ஜ.தவின் போராட்டம் ஓயாது. அவரை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினர் மீது ஊழல் புகார் கூறுகிறார். அவருக்கு தைரியம் இருந்தால் முதல்வர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு தேர்தலை சந்திக்க வேண்டும். மக்களின் பணத்தையும் சொத்தையும் அபகரித்த அவருக்கு மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள்.““ – என்றார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் சித்தராமையா,



“முன்னாள் முதல்வர் எடியூரப்பா ஊழல் வழக்கில் சிறைக்கு சென்றவர். அவருக்கு என்னை பற்றி விமர்சிக்க தகுதியில்லை. குமாரசாமியும் எடியூரப்பாவும் சந்தர்ப்பவாதிகள். என்னை அரசியலில் இருந்து ஒதுக்க வேண்டும் என்பதற்காக கூட்டு சேர்ந்துள்ளனர்.

எடியூரப்பாவும் பா.ஜ.க.வினரும் கன்னட மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள். அதனையும் மீறி அவர்கள் வென்றால், பா.ஜ.க. மேலிடமே எடியூரப்பாவுக்கு முதல்வர் பதவி கொடுக்காது.”– என்றார்.





# பங்களாதேஷில் போராட்டத்தின் எதிரொலி பதவி விலகினார் உச்ச நீதிமன்ற நீதிபதி

மாணவர் அமைப்பினரின் தீவிர போராட்டத்தால் பங்களாதேஷின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவி விலகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1971 பாகிஸ்தான் போரால் உயிரிழந்த வீரர்களின் வாரிசுகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்திற்கு எதிராக மாணவர் அமைப்பினர் அண்மையில் போராட்டம் நடத்தினர்.

மாணவர் அமைப்பினரின் இந்த போராட்டத்துக்கு பணிந்த ஷேக் ஹசீனா, பிரதமர் பதவியிலிருந்து விலகி இந்தியாவில் அடைக்களமானார்.

இதையடுத்து மாணவர் அமைப்பினரின் கோரிக்கையை ஏற்று பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் இடைக்கால அரசின் தலைவராகவும் பதவியேற்றுக்கொண்டார்.

இந்தநிலையில் ஷேக் ஹசீனாவின் ஆதரவாளராக கூறப்படும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஒபைதுல் ஹாசன் பதவி விலக வலியுறுத்தி மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்த கோரிக்கையுடன் வங்கதேச உச்சநீதிமன்றத்திற்குள் நுழைந்த மாணவர்கள், தலைமை நீதிபதி ஒரு மணி நேரத்தில் பதவி விலக கெடு விதித்த நிலையில், நெருக்கடி அதிகரித்தமையினால் பதவி விலகுவதாக அறிவித்து ஒபைதுல் ஹாசன் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவூதி அரேபியாவிற்கான ஆயுத விற்பனை தடையினை நீக்க பைடன் நிர்வாகம் முடிவு





சவூதி அரேபியாவிற்கு அமெரிக்க தாக்குதல் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கான தடையை நீக்க பைடன் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

2021 ஆம் ஆண்டில், யேமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான சவூதியின் போரில் சாதாரண பொது மக்கள் இறந்து கொண்டிருந்தனர்.

இதை எதிர்த்து அமெரிக்கா சவூதிக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய தடை விதித்தது.

இதற்குப் பிறகு, 2022 இல் ஐ.நா.வின் மத்தியஸ்தத்துடன், யேமன் மற்றும் சவூதியில் ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டது.

இதையடுத்து அங்கு வான்வழித் தாக்குதலை சவூதி நிறுத்தியது. அமெரிக்க சட்டத்தின்படி, எந்தவொரு நாடும் பாரிய ஆயுதங்களை வழங்குவதற்கு முன்பு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சித் தலைவர்கள் இருவரும் யேமனில் மனித உரிமை மீறல்கள் குறித்த பிரச்சினையை எழுப்பியுள்ளனர், மேலும் சவூதி அரேபியாவுக்கு ஆயுதங்கள் வழங்குவது குறித்து பல முறை கேள்வி எழுப்பியுள்ளனர்.

இருப்பினும், இஸ்ரேல் மற்றும் ஹமாஸில் போர் தொடங்கியதிலிருந்து இந்த எதிர்ப்பு குறைந்துவிட்டது.


இதன்மூலம், மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த தடை முடிவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய, அமெரிக்க வெளியுறவு துறை, சவூதி அரேபியாவுக்கு காற்று முதல் தரை வரை எனப்படும் ஆயுதங்களை மாற்றுவதற்கான தடை சிலவற்றை நீக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
பக்கங்கள் 05
ஞாயிற்றுக்கிழமை 11/08/2024

## கியூபெக் இளைஞரே சுட்டுப் படுகொலை!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 11
வூட்பைன் கடற்கரைக்கு அருகில் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட நபர் கியூபெக்கை சேர்ந்த 21 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். C2




# ஹோட்டல் தொழிலாளர்கள் மொன்ட்ரியலில் போராட்டம்

**கியூபெக், ஓகஸ்ட் 11**
**பரபரப்பான கோடை சுற்றுலாப் பருவத்துக்கு மத்தியில் மொன்ட்ரியலின் குயின் எலிசபெத் ஹோட்டலில் உள்ள தொழிலாளர்கள் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மறியல் செய்பவர்களுடன் சேர்ந்து மேலும் இரண்டு நகர ஹோட்டல்களில் இருந்து தொழிலாளர்கள் அவர்களது ஒப்பந்தப் பேச்சுக்களில் ஏற்பட்ட முட்டுக்கட்டைக்கு எதிராகத் திரண்டனர்.**

தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் CSN என அறியப்படும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, சனிக்கிழமையன்று நடத்திய மறியல் போராட்டத்தில் 1,000 உறுப்பினர்களும், குயின் எலிசபெத் ஹோட்டலில் இருந்து 600 பேரும், மேரியட் சேட்டோ சாம்ப்ளைனில் இருந்து 350 பேரும், ஹயாட் பிளேஸ் மொண்ட்ரியலில் இருந்து சுமார் 100 பேரும் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக்கின், மொன்ரியல், கெப்பிடல் நெஷனால், எஸ்ட்ரி மற்றும் சகுனே - லெக்-செய்னட்-ஜீன் ஆகிய பகுதிகளில் உள்ள 30 ஹோட்டல்களில் உள்ள தொழிலாளர்கள் நான்கு ஆண்டுகளில் 36 சதவீத ஊதிய உயர்வு மற்றும் தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பயன்பாட்டை நிறுத்த வேண்டும் என்று கோரி இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



# ஜெஸ்பர் காட்டுத் தீயால் இடம்பெயர்ந்தோர் மீள்திரும்புவதற்கான திகதி இன்று அறிவிப்பு

அல்பேர்ட்டா, ஓகஸ்ட் 11
ஜெஸ்பர் பகுதியில் இடம்பெற்ற காட்டுத்தீயினால் அப்பகுதியில் இருந்து வெளியேறியவர்கள் மீள்திரும்புவதற்கான திகதி, நாளை அறிவிக்கப்படவுள்ளது.

இணைய வழியாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் C2




# ஓஷாவாவில் பல வாகனங்கள் மோதின ஒருவர் மரணம்; 8 பேருக்குப் படுகாயம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 11

ஓஷாவாவில் நேற்று மாலை பல வாகனங்கள் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார், எட்டு பேர் காயங்களுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

12:15 மணியளவில் நெடுஞ்சாலை 401 க்கு தெற்கே உள்ள ரிட்சன் சாலை தெற்கு மற்றும் புளூர் ஸ்ட்ரீட் கிழக்கு சந்திப்பில் இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவ இடத்திலேயே ஒருவர் இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது,

அதே நேரத்தில் எட்டு பேர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## ஜெஸ்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெஸ்பர் நகர மேயர் ரிச்சர்ட் அயர்லான்ட் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எனினும், நாளை எத்தனை மணிக்கு இந்த அறிவித்தல் வரும் என்பது குறித்து அவர் எந்த தகவலும் குறிப்பிடவில்லை.

காட்டுத் தீ காரணமாக ஜெஸ்பர் தேசியப் பூங்காவின் 20,000 பயணிகளும், நகரத்தைச் சேர்ந்த சுமார் 5,000 பேரும் நகரத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

தீயணைப்புப் படையினரின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டினால் இந்த மீள் திரும்பல் சாத்தியமாகியுள்ளதாக மேயர் அயர்லான்ட் தெரிவித்துள்ளார்.

## கியூபெக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேக் ஷோர் பவுல்வர்ட் ஈஸ்ட் மற்றும் போர்டுவாக் டிரைவ் இடையேயான பாதையில் ஓகஸ்ட் 8ஆம் திகதி இரவு 10:40 மணியளவில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது.

ஒரு குழுவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் எனவும், சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகள் வந்து பார்த்தபோது, டேசியா பொங்கோ மார்பில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இருப்பதைக் கண்டனர்.

வூட்பைன் கடற்கரைக்கு அருகே பயங்கர துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் கிட்டத்தட்ட ஒரு டஜன் வெற்றுச் சன் னங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த வருடத்தில் டொரன்டோ நகரின் 52வது படுகொலைச் சம்பவமாக இது உள்ளது.



# எட்டாவது தங்கத்தை சுவீகரித்தது கனடா!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 11

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களுக்கான ஒற்றையர் 200 மீட்டர் படகோட்டும் போட்டியில் கனடா தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

இது கனடா வெற்றி பெறும் இருபத்தி ஐந்தாவது பதக்கமாகும்.

இதில் எட்டு தங்கப் பதக்கங்களும் அடங்குகின்றன.

ஓலிம்பிக் போட்டியில் கனடா அதிக பதக்கங்களை இந்த முறையே வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

28 வயதான மிசிசாகா நகரை சேர்ந்த கேட்டி வின்சென்ட் நேற்று 200 மீட்டர் படகோட்டும் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

2024 பெரிஸ் ஒலிம்பிக்கில் கேட்டி வின்சென்ட் வெற்றி பெறும் இரண்டாவது பதக்கம் இதுவாகும்.








# கியூபெக் மாகாணத்தில் விற்கப்படுகின்ற பதப்படுத்தப்பட்ட தேங்காயில் கிருமிகள்

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் விற்கப்படும் பதப்படுத்தப்பட்ட தேங்காயிலும் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சில காலத்துக்கு முன்னர் கனடாவில், கிர்ணி பழம் மற்றும் நொறுக்குத்தீனிகளில் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர், சில குளிர் பானங்களில், லிஸ்டீரியா என்னும் நோய்க் கிருமிகள் குறித்து செய்திகள் வெளியாகின.

சமீபத்தில், கனடாவில் பானம் ஒன்றில் லிஸ்டீரியா என்னும் நோய்க் கிருமி கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அந்த பானத்தை அருந்திய 13 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள், 2 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்நிலையில், இப்போது கனடாவின் கியூபெக் மாகாணத்தில் விற்கப்படும் பதப்படுத்தப்பட்ட தேங்காயிலும் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

துருவி, உறையவைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படும் தேங்காயில் சால்மோனெல்லா என்னும் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனக் கனேடிய உணவு பாதுகாப்பு ஏஜன்சி தெரிவித்துள்ளது.

Yen Ocean Swallow என்னும் பிராண்ட் பெயர் கொண்ட, துருவி உறையவைக்கப்பட்டுள்ள 400 கிராம் பாக்கெட்களாக விற்கப்படும் lot code F2-23 11358 மற்றும் 2025, அக்டோபர் 1 காலாவதி திகதி கொண்ட தேங்காய் பக்கெட்டுகள்தான் திரும்பப் பெறப்படுகின்றன.




# சீனப் பூர்வீகத்தைக் கொண்ட கனடியர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் மோசடி

அல்பேர்ட்டா, ஓகஸ்ட் 11

சீனப் பூர்வீகத்தைக் கொண்ட கனடியர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்டு வந்த மோசடி நடவடிக்கை குறித்து வான்கூவர் பொலிஸார் தகவல் வெளியிட் டுள்ளனர.

இந்த மோசடி நடவடிக்கையின் ஊடாக இந்த வருட ஆரம்பத்தில் இருந்து சீனக் கனடியர்களிடம் இருந்து 6 மில்லியன் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக வான்கூவர் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோசடி தொடர்பில் 26 சம்பவங்கள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மேசாடிக்கு மேலும் பலரும் ஆளாகியிருக்கலாம் என்பதால், அது குறித்த தகவல்களை பொலிஸாருக்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.






# கொலைக் குற்றத்துக்காக ஒரு வருடத்துக்கும் மேலாக கனடாவில் தேடப்பட்ட நபர் நியூயோர்க்கில் சிக்கினார்

தப்பி ஓடிய நிலையில் கனடா முழுவதும் பிடியாணையின் பேரில் ஒரு வருடத்திற்கும் மேலாகத் தேடப்பட்டு வந்த ஒரு கொலைச் சந்தேக நபர், இறுதியாக நாட்டிற்கு வெளியே பிடிபட்டு மீண்டும் நீதியை எதிர்கொள்ளக் கொண்டுவரப்பட்டார்.

ஜோசப் கிளாலா, 23, இந்த வார தொடக்கத்தில் நியூயோர்க் மாநிலத்தில் கைது செய்யப்பட்டார் என எட்மண்டன் பொலிஸ் சேவை வெள்ளிக்கிழமை அறிவித்தது.

எட்மண்டன் நகரின் தெற்கு விளிம்பில் உள்ள புதிய புறநகர் பகுதியில் கடந்த கோடையில் நடந்த ஒரு கொலை தொடர்பாக கிளாலா தேடப்பட்டு வந்தார்.

திங்கட்கிழமை, ஜூன் 12, 2023, மாலை 6:30 மணியளவில், அல்லர்ட் லிங்க் எஸ். டபிள்ய. மற்றும் ஆர்தர்ஸ் கிறசண்ட் எஸ். டபிள்யூ. அருகிலுள்ள ஒரு சந்தில் காயமடைந்த ஒரு நபர் பற்றிய தகவல் பொலிஸுக்குக் கிடைத்தது.

அலார்ட் பகுதியில் உள்ள சந்து பகுதியில் 21 வயதான ஒசாமா அலி



இறந்து கிடந்தமையை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு பிரேதப் பரிசோதனையில் அவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் இறந்தமை கண்டறியப்பட்டது. இது கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, அலியின் மரணத்திற்காக இரண்டாம் நிலை கொலைக்காக தேடப்பட்ட கிளாலாவிற்கு கனடா முழுவதும் பொலிஸார் வாரண்ட் உத்தரவைப் பெற்றனர்.

கிளாலாவும் கொலையுண்ட அலியும் ஒருவரையொருவர் முன்னரே நன்கு அறிந்திருந்தனர் எனப் புலனாய்வாளர்கள் நம்பினர்.

அந்த நேரத்தில் இருவரும் - துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பு வரை - பொலிஸ் கண்காணிப்பில் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இந்த மரணம் 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் சூழலில்' இடம் பெற்றது என்று பொலிஸ் வகைப்படுத்தியது.

இந்தக் கொலை நடந்த நேரத்தில் சந்தேக நபர் கிளாலா ஏற்கனவே ஒரு வழக்கில் தப்பியோடி தேடப்பட்டவராக இருந்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் கால்கேரியில் அவரைக் கைது செய்வதற்கான வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஜனவரி 2023 இல் மனித படுகொலைக்கு குற்றத்தை ஒப்புக்கொண்ட அவர் அந்தக் கொலை வழக்கில் தண்டனையை எதிர் கொள்வதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் தனது கண்காணிப்பு வளையலை அகற்றி விட்டுத் தப்பி தலைமறைவாக இருந்து வந்தார்.

